பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

அன்பளிப்பு

File ③

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 5 வெள்ளிக்கிழமை (19-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 54

# கிழக்கில் வவுணதீவு பகுதி நோக்கி ராணுவத்தினர் முன்னேற முயற்சி

## கிழக்கில் இடம்பெறுவது 'ஒளிக்கதிர்'

கொழும்பு, ஜன. 19

கிழக்கில் படையினர் ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கைக்கு ''ஒளிக்கதிர்'' (SUN BEAM) என்று பெயரிடப் பட்டுள்ளது.

திங்களன்று ஆரம்பமான இத்தாக்குதலில் படையினருக்கு சேதம் ஏற்படவில்லை என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேடுதல்

சாவகச்சேரி, ஜன. 19

திருகோணமலையின் வடக்கு-கிழக்கு பகுதியில் படையினர் தேடுதல் நடத்தியுள்ளனர்.

தமிழர் கிராமத்தை சுற்றி வளைத்தே தேடுதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுறகிது. [இ-3]

## நீண்ட நாள்களாக எதிர்பார்க்கப்பட்ட படை நடவடிக்கை ஆரம்பம்

சாவகச்சேரி, ஜனவரி 19

நீண்ட நாள்களாக எதிர்பார்க்கப்பட்ட ராணுவ நடவடிக்கை கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பில் நேற்று முன்தினம் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கவச வாகனங்கள் சகிதம் ஸ்ரீலங்காப் படையினர் முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டனர்.

அதிகாலை 4-30 மணியளவில் வலையிறவு இராணுவ முகாமில் இருந்து கவச வாகனங்களில் வவுணதீவு நோக்கி இந்த முன்னேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

முன்னேற்ற முயற்சி பயனளிக்காத காரணத்தினால் பிற்பகல் 2 மணிக்கு படையினர் தமது பழைய இடங்களுக்குத் திருபினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னேற்ற நடவடிக்கையின் போது படையினர் ஏவிய ஷெல்களால் மக்களின் வீடுகள் சேதம் அடைந்தன.

இதேவேளை — வெல்லாவெளி 36 ஆம் கிராமம், 19 ஆம் கட்டை ஆகிய பகுதிகளில் உள்ள முகாம்களில் இருந்து 39 ஆம் கிராமம்' சித்திமடு கிராமங்களை நோக்கி முன்னேறிய பொலீஸ் விசேட அதிரடிப் படையினரும் பின்னர் அங்கிருந்து பழைய நிலைக்குத் திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் ழக்கு காடுகளில் மறைந்துள்ள விடுதலைப் புலிகளை தேடி அழிக்கும் இராணுவ நடவடிக்கையை படையினர் ஆரம்பித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரி

]6 ஆம் பக்கம் பார்க்க]

## மலேசியாவில் தமிழர் ஆதரவு பேரணி

சாவகச்சேரி, ஜன. 19

மலேசியா தலைநகர் கோலாலாம்பூரில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக அங்குள்ள தமிழர்கள் பேரணி நடத்தினர்.

ஆயிரத்துத் துக்கு மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்ட இப் பேரணியில் ஈழத் தமிழருக்காக குரல் எழுப்பப்பட்டது.

கடந்த 7 ஆம் திகதி நடந்த இப்பேரணியை நாதஸ்வர — தவில் கலைஞர் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஊர்வலத்தில் சென்ற மக்கள் தலையில் பால் குடங்களை சுமந்த வாறும், பிரார்த்தனைப் பாடல்களை பாடிய வாறும் கோலம்ாலபூர் வீதிகளால் சென்றிருந்தனர்.

[இ-3]

# வடக்குத் தாக்குதல் தாமதம் அடையலாம்

## ஜோர்ஜ் ஆர்னி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 19

கிழக்கில் படையினர் தமது தாக்குதலை ஆரம்பித்திருப்பதால் வடபகுதி மீதான படையினரின் அடுத்த கட்டத் தாக்குதல் தாமதம் அடையலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

பி. .பி. ஸி. செய்தியாளர் ஜோர்ஜ ஆர்னி மேற்கண்டவாறு தெவித்துள்ளார்.

இந்த ராணுவ நடவடிக்கையில் விசேட அதிரடிப் படையினரும் சிறப்புப் படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் பகுதிக்கு 32 தமிழ் குடும்பங்கள்

### படையினர் கொண்டு சென்றனர்

சாவகச்சேரி, ஜன. 19

வவுனியாவில் இராணுவ ஆக்கிரமிப்புப்பகுதியில் உள்ள அசுதிமுகாமில் இருந்த 32 தமிழ்க் குடும்பங்கள் கடந்த திங்கட்கிழமை படையினரால் வலிகாமத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பலவந்தமாகவே இந்த குடும்பங்கள் வலிகாமம் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## யாழ்ப்பாணம் தட்டாதெருவில் படையினர் தங்கியிருந்த வீடு மீது புலிகள் தாக்குதல்

சாவகச்சேரி, ஜன. 19

யாழ்ப்பாணம் தட்டாதெருப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ வேலிக்கு முன்னால் 100 யார் தூரத்தில் அமைந்துள்ள இராணுவத்தினர் தங்கும் வீட்டின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது

இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேதம் குறித்து தெரியவரவில்லை. (இ- 3)

## படையினரிடம் சிக்கிய மக்களுக்கு வலிகாமத்தில் சிறைக்கூட வாழ்க்கை

### அங்கு சென்ற மதகுருமாரிடம் தகவல்

சாவகச்சேரி, ஜன. 19

சிறையில் வைக்கப்பட்டுள்ளது போன்ற வாழ்க்கையையே தாம் வாழ வேண்டியுள்ளதாக —

யாழ்ப்பாணத்தில்— வலிகாமத்தில்— சிக்குண்ட மக்கள் அங்கு சென்ற மதகுருமார்களிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

கிறிஸ்தவ மதகுருமார் குழுக்கள் சில கொழும்பிலிருந்து, படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் சிக்குண்ட மக்களைப் பார்ப்பதற்காக விமான

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பெப்ருவரி 15 ஆம் திகதிக்குப் பின்னர் சகல பாடசாலைகளையும் முழுதாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை

சாவகச்சேரி, ஜன. 19

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள சகல பாடசாலைகளையும் அடுத்தமாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர் முழுமையாக இயங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதென நேற்று பிற்பகல் யாழ். செயலகத்தில் நடந்த [illegible] தில் முடிவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் [illegible] இல் அரச திணைக்களத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தாலிக் கொடிகளுடன் யாழ். நகரில் சிப்பாய்கள்!

சாவகச்சேரி, ஜன. 19

யாழ்ப்பாணத்தில் — யாழ். நகரத்தில் — சிறிலங்கா சிப்பாய்கள் ஒரு சிலர் கழுத்தில் தாலிக்கொடியுடன் நடமாடுகின்றனர்!

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்று திரும்பியவர்களிடம் அங்கு சிக்குண்ட மக்கள் இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் இராணுவத்துக்கு அஞ்சி இரவோடு இரவாக இடம்பெயர்ந்த குடும்பப் பெண்கள் பலர் தாலிக்கொடிகள் உட்பட தமது நகைகளை விட்டு விட்டு வந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரில் உயிரிழந்த
# படையினர் உறவினருக்கு வடக்கில் காணி வழங்குக

### ஜனாதிபதிக்கு சிங்கள அமைப்புகள் மகஜர்

கொழும்பு, ஜன, 19
வடக்கு—கிழக்கு போரில் உயிரிழந்த முப்படைகளையும் பொலீசையும் சேர்ந்தோரின் குடும்பங்ளுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளை வழங்கிஅனைத்து வசதிகளும் கொண்ட சிறு நகரங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

சிங்கள அமைப்புகள் பதினெட்டும் சேர்ந்து ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் முன்வைக்பட்டுள்ள ஏனைய கோரிக்கைகளில் சில வருமாறு;-

★ வடக்குகிழக்கில் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள்அவர்களதுசொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்பட்டு புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

★ வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தக்கூடாது. பதிலாக விரைவுபடுத்தப்பட வேண்டும்.

✶ வடக்கு — கிழக்கில் பாதுகாப்பான நிலைகள் தெரிந்தெடுக்கப்பட்டு அங்கெல்லாம் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட வேண்டும். (அ-10)

## கலைஞருக்கு நிதி உதவி

கொழும்பு, ஜன. 19
கலைக்கலைச்சின்துதும், நாட்டின் கலாசாரத்தினதும் அபிவிருத்திக்கு பெரும் தொண்டாற்றி, தேசிய மட்டத்தில் மதிப்பைப்பெற்று தமது துறைகளில் சிறந்து விளங்கிய கலைஞர்களுக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

முதுமை நிலையில் அவர்களுக்கு உதவுவதற்காகவே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவிருக்கிறது.

(இ-3)

## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த
**திரு. T. அரவிந்தன்**
உடனடியாக நேரிலோ, கடிதமூலமோ கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**K. விக்னேஸ்**
C/o. S. செல்லத்துரை
விடத்தற்பளை,
மிருசுவில். (40189)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு பூநகரியில் குடியிருப்புகள்

### விசேட செயலணிக்குழு அமைப்பு

பூநகரி, ஜன. 19
யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து பூநகரிப் பிரதேசத்தில் வந்து தங்கியுள்ள மக்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக விசேட செயலணிக் குழு ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தோரைக் குடியமர்த்தக் கூடிய காணிகளை இனங் காணுதல், பொருத்தமான வீடுகளை அமைப்பது, அவர்களுக்கான குடிதண்ணீர், சுகாதார வசதிகள், கடைகள் மற்றும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பது ஆகிய பணிகளை இந்தச் செயலணிக்குழு வே செய்யவுள்ளது.

பூநகரிப் பகுதிப் பிரதேச செயலர் திரு. இ. ரவீந்திரன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் வீடமைப்புச் செயலணிக் குழுவை நியமிப்பது குறித்து முடிவு செய்யப்பட்டது.

காணி உத்தியோகத்தர் திரு. ச. பாலசிங்கம் (தலைவர்), சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. செ. தவநாயகர், திரு.எஸ். மகாலிங்கம் ஆகியோர் இந்த செயலணிக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

(அ-133)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம். இலங்கை

### சித்த மருத்துவம் புதிய அனுமதி 1995 / 96

**1995 / 96** ஆம் கல்வி ஆண்டுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்காக **1991, 92, 93** ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில், நான்கு பாடங்களிலும் சித்தியெய்திய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 28-02-1996 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**தகைமைகள் :**

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதீகம் ஆகிய நான்கு பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி பெற்றிருப்பதுடன் குறைந்தது 180 புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீடத்தில் அல்லது சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள உப – அலுவலகத்தில் ரூபா 20/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
18- 01- 1996
(C/3162)

## புலிகள் பற்றிய வதந்தியால் வென்னப்புவலில் பதற்றம்

இனந்தெரியாத ஒருநபர் வர் பரப்பிய வதந்தி காரணமாக வென்னப்புவ பாடசாலைகளில் பதற்றம் நிலவியது.

விடுதலைப் புலிகள் குழு ஒன்று பாடசாலை பிள்ளைகளை கடத்திச் செல்ல அப்பகுதிக்கு வந்துள்ளதாக கல்தெனிய பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் வதந்தியை பரப்பியிருந்தார்.

இவரை கைது செய்ய பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பளையில் மலேரியா

வியாபாரிமூலை, ஜன .19
மூளைமலேரியா, மலேரியா போன்ற நோய்கள் பளை பிரதேசத்தில் பரவிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் முகமாலை இயக்கச்சி ஆகியஇடங்களைச் சேர்ந்த இருவர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வருடத்தின் முதல் வாரத்தில் மட்டும் பளை அரசினர் வைத்தியசாலையில் 70 பேர் வரை சாதாரண மலேரியாவுக்கு உள்ளாகி வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது.

இவ்வாரத்தில் 228பேருக்கு மலேரியா நோய்க்கான இரத்தப் பரிசேதனை மேகாள்ளப் ளப்பட்ட போது—

இரண்டு பேர் மூளை மவேரியாவினாலும் —

எழுபது பேர் சாதாரண மலேரியாவினாலும் — பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-152

## மிருசுவிலில் விற்பனை நிலையம்

பொதுமக்களின் வசதியைக் கருதிவர்த்தகத்திணைக்களம் மிருசுவில் பகுதியில் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துள்ளது.

மாவு, சீனி ஆகிய பொருள்களைத் தவிர ரூபா ஐம்பது பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு உலர் உணவு அட்டைக்கு ஒரு கட்டி சன்லைட் ரூபா 12 க்கும் இரு தீப்பெட்டிகள் தலா ரூபா 3-50 க்கும் வழங்கப்படுகிறது.

(இ-111)

## பத்திரிகைகளின் போக்கு குறித்து அனுருத்த கவலை

### எதிரிகளுக்கு நன்மை தருகிறதாம்

கொழும்பு, ஜன. 19
நாட்டின் ஒற்றையாட்சி அந்தஸ்துக்குப் பாதிப்பை உண்டு பண்ணும் செய்திகளை வெளியிடவேண்டாமென பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யுத்த நடவடிக்கைகளுக்கு உதவுமுகமாகப் பத்திரிகைத் தணிக்கை கொண்டு வரப்பட்டது என்றும் எவ்வாறாயினும் இந்தத் தணிக்கை தற்போது நீக்கப்பட்டுள்ளது என்றும் வெகுஜனத் தொடர்பு சுதந்திரத்தை அரசாங்கம் பலப்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால் வெகுஜனத் தொடர்புத் துறையின் சில பிரிவுகள் எதிரிகளுக்கு நன்மை அளிக்கக்கூடிய செய்திகளை வெளியிட்டு வருவதாகவும்—

பத்திரிகைச் சுதந்திரம் என்ற பெயரில் இவ்வாறு வெளியிடப்படும் செய்திகள் நாட்டின் ஒற்றை ஆட்சி முறைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்றும்—

இத்தகைய தேசாபிமான மற்ற செயலைக் கைவிட்டு பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

(இ-10)

## நோயாளர் நலன்புரி சங்க கிளை திறந்துவைப்பு

நோயாளர் நலன்புரிச் சங்கம், பளை சுற்றயல் மருத்துவ மனையில் கிளை அலுவலகம் ஒன்றை நேற்று திறந்து வைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் அரசியல் துறையைச் சேர்ந்த திரு. பாப்பா தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், தமிழீழ மருத்துவத்துறைப் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி தா. அருள் நலன்புரிச் சங்க கொடியை ஏற்றினார்.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் க.தா. சிவபாதம் பணிமனை பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.

விடுதலைப் புலிகளின் இராணுவப்பிரிவு வைத்தியப் பொறுப்பாளர் டாக்டர் பத்மலோஜினி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

உணவகம், விற்பனை நிலையம் ஆகியனவும் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து நடந்த கூட்டத்தில் பளை வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் அம்பிகைபாகன், டாக்டர் க.தா. சிவபாதம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

ஊனமடைந்த இருவருக்கு கைத்தடிகளும் வழங்கப் பட்டன.

இறுதியில் திரு. எஸ்.சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

(இ-3-7)


உ
சிவமயம்

## திருமண விஞ்ஞாபனம்

அன்புடையீர்;

நிகழும் மங்களகரமான யுவ வருஷம் தைத்திங்கள் **7** ஆம் நாள் (21-01-96) ஞாயிற்றுக்கிழமை காலை **7-45** மணி முதல் **9-45** வரையுள்ள பிரதமை திதி அமிர்தயோகம் திருவோண நட்சத்திரம் கூடிய கும்ப லக்கின சுபமுகூர்த்த வேளையில்

காங்கேசன்துறை
**விசாகப்பெருமாள் சடாச்சரம்**
அவர்களின் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ஞானச்சந்திரன்**
அவர்களுக்கும்

வல்வெட்டித்துறை
**இராமநாதபிள்ளை குழந்தைவேல்**
அவர்களின் ஏக புத்திரி
திருநிறை செல்வி
**கோதை**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு திருமணம் நடத்த பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றதென்பதை நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

வைபவ இடம்: வல்வை சிவன் கோவில்

★ தங்கள் நல்லாசியை நாடும் ★

திருமதி சிவசுந்தரி விஸ்வரஞ்சன்
தற்போதைய முகவரி:
மே/பா. ஜெயராசா
[illegible]
[illegible]

இராமநாதபிள்ளை குழந்தைவேல்
குடும்பம்
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
(40086)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுத் திட்டம் குறித்து ஐ. தே. கட்சி மௌனம்

## ஆராய்ந்தே முடிவு எடுக்கப்படுமாம்

கொழும்பு, ஜன. 19
பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சட்டவரைவு குறித்து உத்தியோகபூர்வமாகக் கருத்து எதுவும் வெளியிடாது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி மௌனம் சாதித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசால் முன்வைக்கப்பட்டுள்ள சட்டவரைவு குறித்து தற்போது எதுவும் கூறமுடியாது என ஐ. தே. கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத்திட்டம் இதுவரை உத்தியோகபூர்வமாக தமது கட்சிக்கு அனுப்பப்படவில்லை என்றும்—

அது கிடைத்ததும் அது பற்றி கட்சி ஆராய்ந்து முடிவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்திருப்பதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று அறிவித்தது. (இ-10)

## யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தை உடனடியாக வாபஸ் பெறக் கோரிக்கை

### சந்திரிக்காவுக்கு சுவாமிகள் கடிதம்

வடமராட்சி, ஜன. 19
யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தை உடனடியாக வாபஸ் பெறுக. சகல தடைகளையும் நீக்கவும். பல்வேறு இராணுவ நடவடிக்கைகளாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களை ஆரம்பிக்கவும்.

சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தி, பேச்சுவார்த்தைகளை விசுவாசத்துடன் தொடங்கவும்.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் கேட்டுள்ளார்.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைவதற்கு இன்னும் காலம் பிந்திவிடவில்லை என்றும் —

தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை வழங்குமாறும் — சுவாமிகள் தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

உங்களை சுற்றிவரவுள்ளவர்கள் தள உண்மைகளை அறியாதவர்களாக இருக்கிறார்கள். அதனால் உங்கள் அரசாங்கம் வீழ்ச்சி அடைவது நிச்சயம் — என்றும் சுவாமி தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ-173)

## இறப்பு - பிறப்பு சான்றிதழ்

### விண்ணப்பம் ஏற்கும் பணி மீண்டும் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜன. 19
விவாக, இறப்பு, பிறப்பு சான்றிதழ்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்கும் பணி செயலகத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் செயற்படும் யாழ். செயலகத்தின் பதிவாளர் பிரிவில் நேற்று முன்தினம் விண்ணப்பக்கள் ஏற்கப்பட்டன.

1940ஆம் ஆண்டின் பின்பு நிகழ்ந்த விவாக, பிறப்பு தொடர்பான விண்ணப்பங்களும்—

1975ஆம் ஆண்டின் பின்பு நிகழ்ந்த இறப்பு தொடர்பான விண்ணப்பங்களும்— ஏற்கப்பட்டன.

சான்றிதழ் பெறும் திகதி உடனடியாக விண்ணப்பதாரிகளுக்கு தெரியப்படுத்துவதாகவும்—

அந்த திகதியில் சமூகமளிக்கும் போது சான்றிதழ் வழங்கப்படும் என்றும் — மேலதிக மாவட்டபதிவாளர் தெரிவித்தார்.

ஒரு சான்றிதழ் மட்டும் வழங்கப்படும் என்றும்—

மேலதிகமாகத் தேவைப்படுவோர். அவற்றை போட்டோப் பிரதி செய்து — சமர்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

19 — 01 — 1996

இரவு

★ 8. 02 — கலைமஞ்சரி நிகழ்ச்சி - புதியபாடல்கள் சிறுகதை - இ இராஜேஸ்வரன் எழுதிய ''தாயுள்ளம் பூரிந்தது'' கவிதை- தமிழ்க்கவி எழுதிய ''உனக்கு தடையா''
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

20 — 01 — 1996

காலை

★ 7. 02 — மாவீரர்வணக்கம்
★ 7. 10 இன்றைய தாரகை
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து 8. 00 மணிவரை தாயகப் பாடல்கள்.

## இடம்பெயர்ந்தோருக்கு யுனிசெவ் அமைப்பு உதவி

கொழும்பு, ஜன. 19
வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியுள்ளவர்களுக்கு உதவ ஒரு தொகுதி நிவாரணப் பொருள்களை வழங்க யுனிசெவ் அமைப்பு முன் வந்துள்ளது,

9ஆயிரம் பிளாஸ்டிக்வாளி, 8 ஆயிரம் பிளாஸ்டிக் பாய், 45 றோல் கூரைப் பொலித்தின், 500 தொகுதி சமையல் பாத்திரங்கள் 500 லாம்புகள் ஆகியவற்றை அந்த அமைப்பு வன்னி மாவட்ட நிவாரணப் பணி இணைப்பாளரும் வவுனியா அரச அதிபருமான திரு. கே. கணேசுடன் கையளித்துள்ளது.

ஓரிரு தினங்களில் அவை வன்னிக்கு அனுப்பப்படும் என்த் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தமிழீழ வைப்பக நடைமுறை கணக்கு

தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் மிக விரைவில் நடைமுறைக் கணக்கு ஆரம்பமாகவிருக்கிறது.

மேற்கண்டவாறு தமிழீழ வைப்பகப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# அரசியல்-யுத்த-இயற்கைக் குழப்பம் இவ்வாண்டு ஸ்ரீலங்காவில் நிகழும்

## சிங்கள சோதிட நிபுணர் ஆருடம்

தற்போது அரசியல் நிலை குறித்து பலரும் பல விதமாகப் பேசிவருகிறார்கள். இப்புத்தாண்டில் என்ன நிகழப்போகிறது என்பது குறித்து சோதிட நிபுணரான பேராசிரியர் எல். வி. நந்தசேன தெரிவித்துள்ள ஆருடங்களிற் சில இங்கு பிரசுரமாகின்றன. இவை ''லக்பிம'' சிங்கள வார இதழில் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்காவின் அரசியல் இவ்வாண்டில் குழப்பம் நிறைந்ததாகக் காணப்படும். ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நாடாளுமன்றத்தில் குழப்பங்களும் கைகலப்புகளும் இடம்பெறும். கட்சித் தாவல்கள் நிகழும். அமைச்சரவை மீளமைக்கப்படும். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ள சட்டவரைவை நிறைவேற்ற முடியாத நிலை உருவாகும். இது தொடர்பாக மக்கள் கருத்துக் கணிப்பு எடுக்கப்படுமானால் அது தோல்வியைத் தழுவும்.

22-3-1996ஆம் திகதிக்கு முன்னர் முன்னணி அரசியல்வாதிக்கு ஏற்படவுள்ள மரணம் இவ்வாண்டின் முக்கிய சம்பவமாக அமையும்.

தற்போது அரசியலிலிருந்து ஓய்வுபெற்ற அல்லது அரசியலில் ஈடுபட்டுள்ள அரசியற் தலைவர் அல்லது தலைவியின் மரணச் செய்தி 25-07-1996க்கு முன்னர் கிடைக்கும்.

### தேர்தல் ஆண்டு

இவ்வாண்டைத் தேர்தல் ஆண்டு எனக் கூறலாம். ஜூலை மாதத்திற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம். ஆகஸ்ட் - டிசம்பர் மாதக் காலகட்டத்தில் பொதுத்தேர்தல் நிகழக்கூடும். இவ்வாண்டில் இரு மக்கள் கருத்துக்கணிப்பு இடம்பெறலாம். பொதுசன ஐக்கிய முன்னணி தேர்தலில் தோல்வியுறவும் ஐ. தே. கட்சி வெற்றி பெறவும் அதிகவாய்ப்புக்கள் உண்டு.

### மாபெரும் வேலை நிறுத்தம்

14-05-1996க்கு முன்னர் நாடளாவிய பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும். இதனால் போக்குவரத்துச் சேவைகள் உட்பட முழு அரச இயந்திரமே முடங்கிப் போகும். 22-02-1996 — 18-07-1996 இடைப்பட்ட காலத்தில் இடைக்கிடையே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும். செய்தித் தணிக்கை முறை கொண்டுவரப்படும்.

### கல்வித்துறை

ஜனவரி, மார்ச், ஏப்பிரல் ஆகிய மாதங்களில் பல்கலைக் கழகங்களில் கலவரங்கள் உருவாகவம் இதனால் வாரக் கணக்கில் பல்கலைக்கழகங்களை மூடப்படவும் வாய்ப்புகள் உள்ளன. பாடசாலை மாணவர்கள் பலர் பொலீசாரால் அல்லது பாதுகாப்புப் படைகளால் படுகொலை செய்யப்படலாம்.

### நீதித்துறை

இவ்வாண்டின் மத்தியில் நீதித்துறையைச் சேர்ந்த மிக முக்கியமான ஒருவரின் மரணச் செய்தி கிடைக்கும். இது தீவிரவாதிகளின் செயற்பாட்டின் பிரதிபலனாக அமையலாம். சிறைக்கூடங்களிலுள்ள பல கைதிகள் இவ்வாண்டு மார்ச் — நவம்பர் மாதங்களுக்கிடையே சுரங்கம் அமைத்து வெளியேறக்கூடும். மீண்டும் மரண தண்டனையை நிறைவேற்ற சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்.

### தகவல் சாதனங்கள்

27-04-1996ஆம் திகதிக்கு முன்னர் செய்தித் தொடர்புச் சாதனத்துறையைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்படுவார். முக்கிய செய்தி நிறுவனமொன்றில் வேலை நிறுத்தம் நடைபெறும்.

19-05-1996ஆம் திகதிக்கு முன்னர் முக்கிய வங்கி ஒன்றில் வேலை நிறுத்தம் இடம் பெறும். இதனால் வங்கி நடவடிக்கைகள் பெருமளவில் பாதிப்படையும். தனியார் வங்கி ஒன்றில் உருவாகப் போகும் பிரச்சினையால் அந்த வங்கி மூடப்பட்டு அதன் பின்னர் அப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படும்.

### இயற்கை அனர்த்தங்கள்

ஏப்பிரல் — நவம்பர் மாத [illegible] வெள்ளப்பெருக்குகள் இடம் பெறும். லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாவர். சொத்துக்களுக்கு பெரும் சேதங்கள் ஏற்படும். ஆகஸ்ட், செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களில் ஏற்படவுள்ள மண் சரிவுகளால் உயிர்சேதங்கள் ஏற்படும். ஜூலை — டிசம்பர் மாத எல்லைக்குள் வீசவுள்ள புயல் காரணமாக பெருமளவில் கால்நடைகளும் மக்களும் அழிவர். இந்தப் புயல் பற்றி முன்னெச்சரிக்கைகளை வழங்க வானிலை அவதான நிலையத்திற்கு இயலாமற் போகும்.

23-4-1996ஆம் திகதிக்குப் பின்னர் எரிமலை அல்லது பூமிநடுக்கம் ஏற்பட்டு சேதங்கள் ஏற்படும். 11 - 6 - 1996 ஆம் திகதிக்கு முன்னர் இதுவரை ஒருபோதும் இடம் பெறாத அளவிற்கு பூமிநடுக்கம் ஏற்படும்.

### திடீர் விபத்துகள்

கொழும்பில் அல்லது முக்கிய நகரம் ஒன்றில் 13-5-1996 ஆம் திகதிக்கு முன்னர் அதிசக்திவாய்ந்த குண்டு வெடிக்கும். இது ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் மிகப் பெரிதாக அமைவதுடன் மக்கள் பெருமளவில் கொல்லப்படுவர். 1996 ஆகஸ்ட் — நவம்பர் ஆகிய மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் மேலும் பல குண்டுகள் வெடிக்கலாம்.

பெப்ரவரி—ஜூன் மாதங்களுக்கிடையே நாடாளுமன்றத்திற்குள் அல்லது ஜனாதிபதி மாளிகைக்குள் குண்டு வெடிக்க அதிக வாய்ப்புகள் உண்டு.

23-4-1996 — 11-10-1996 இடைப்பட்ட காலத்தில் பெரிய ரயில் விபத்துக்கள் நிகழும். மார்ச் — ஜூன் மாதங்களுக்கிடையில் பல அரச, தனியார் கட்டடங்களும், வாகனங்களும் தீவிரவாதிகளால் தீ மூட்டி அழிக்கப்படும்.

### மகாநாயக்கர்கள்

13-7-1996க்கு முன்னர் மகாநாயக்க தேரோ ஒருவர் மரணமடையக்கூடும். சங்கீத, திரைப்படத்துறையைச் சேர்ந்த சர்வதேசப் புகழ் பெற்ற ஒருவரின் மரணச் செய்தி 23 - 8 - 1996ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும்.

### யுத்தமுனைகள்

வடக்கு - கிழக்கு யுத்த முனைகளில் பணியாற்றும் லெப்டினன்ட் கேணல் தரத்திற்கு மேற்பட்ட அதிகாரிகளில் ஐவருக்கு மேற்பட்டோர் இவ்வாண்டில் கொல்லப்படுவர். ★ (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொடிகாமம் சந்தைக்கு அண்மையில் கண்டி றோட்டில் 5¼ பரப்பு காணியும் நீர் இறைக்கும் இயந்திரம் (Mark 12), சோலர், Emergency Light ஆகியனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம. அன்னலக்சுமி, நுணுவில் பிள்ளையார் கோவிலடி, சரசாலை வடக்கு, சரசாலை. (40165)

### தேவை

எமது வாணிப நிலையத்திற்கு பீடி, அப்பளம், ஊதுபத்தி, பற்பொடி தயாரிக்கக் கூடியவர்களும், பன்ன வேலை தெரிந்தவர்களும் தேவை. தங்குமிட வசதி உண்டு. விண்ணப்பிக்கவும். இல. 519, மே/பா உதயன், சரசாலை. (40195)

கேர்ணியா பெல்ற் (Hernia Belt) ஒன்று (புதியது அல்லது பழையது) தேவை. விற்க விரும்புவோர் கடித மூலம் தொடர்புகொள்ளவும் இல. 520, C/o உதயன், சரசாலை தெற்கு. (40197)

### வீடு தேவை

பருத்தித்துறையில் வீடு வாடகைக்குத் தேவை. வாடகை முற்பணம் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும். சிவகுமரன் பிடவை மாளிகை, பருத்தித்துறை. (40081)

### அறை தேவை

யாழ். பல்கலைக்கழக ஊழியர் உட்பட இரு ஆண்களுக்கு தென்மராட்சியில் அறை வாடகைக்கு தேவை. விவரங்களுடன் தொடர்பு கொள்க: மே/பா உதயன், இல. 521. (40200)

### ஆங்கிலம் 96

B.Sc. Inter London அனுபவமுள்ள ஆசிரியர் பேச, எழுத குறுகிய காலத்தில் பிரத்தியேகமாக உங்கள் வீட்டில் கற்பிப்பார். தொடர்பு: கடித மூலம். மெடி எயிட்ஸ் மருந்தகம், கண்டி வீதி, சாவகச்சேரி. (40193)

### ஜாதகக் குறிப்பு

ஜாதகக் குறிப்புப் புத்தகம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள சோதி அச்சகம், கச்சாய் வீதி (மக்கள் கடை அருகில்), சாவகச்சேரி. (39972)

## கிளாலியில் சிகிச்சை நிலையம்

கரணவாய், ஜன. 19

கிளாலியில் அவசர கால முதலுதவிச்சிகிச்சை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. (இ-80)


## துர்க்காவின்
## தரமான உள்ளூர் தயாரிப்புக்கள்

★ புதிய டிக்கோல் 50% NEW Tickol 50% கால்நடை புற ஒட்டுண்ணிகளுக்கு.

**துர்க்காவின் வீட்டுப் பாவனைக்குரிய பீடை நாசினிகள்**

★ கில்லேசல் Kilal – நுளம்பு கரப்பான் — செறிதிரவம் (Liquid Spray)
★ எறும்பு கறையான் கோழிப்பேன்
★ மூட்டைப் பூச்சி, இலையான் மற்றும்
★ நுளம்பு அகற்றி (Mosquito Repellent)
★ 100% சுத்தமான குளோரின் தூள் (Bleaching Powder)

எமது தயாரிப்புக்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவும்.

**சந்தைப்படுத்தும் முகாமையாளர்**
**துர்க்கா சந்தைப்படுத்தும் சேவை**
**தாமரைக்குளம், துன்னாலை தெற்கு, கரவெட்டி.**

வியாபாரிகளுக்கு விசேட கழிவு
எங்கள் இதர சேவைகள்

★ உங்கள் பொருள்களை சந்தைப்படுத்துவது சிரமமா?
★ விவசாயம் கால்நடை சம்பந்தமான ஆலோசனை தேவையா?

உடன் மேற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

★ உங்கள் தேவை எங்கள் சேவை ★

(40083)


## கணக்காய்வு நிறுவனம்

**சோமேஸ்வரன், ஜே.எம். இராஜநாயகம் அன் கோ.**
**எக்கவுண்டிங் சிஸ்ரம் அன் சேவிர்ஸஸ் (யாழ்.) லிமிட்டெட்.**
**இரட்ணம் அன் கோ.**

இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் தற்போது பின்வரும் முகவரியில் இயங்குகின்றது.

திரு. கே. சுப்பிரமணியம்,
''பத்மபதி'',
கச்சாய் வீதி, கொடிகாமம்.

வாடிக்கையாளர்கள் காலை 9-00 தொடக்கம் பிற்பகல் 2-00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாகம்

(39973)

\+

## 8ஆம் நாள் நினைவஞ்சலி

மல்லாகம் குளமன்கால் புனித சவேரியர் கோவில் பங்கைச் சேர்ந்தவரும், தற்போது மீசாலையில் வசித்தவருமாகிய

திருமதி
**அகஸ்ரீன் கிறகோரியா**
(அவர்கள்)

11-01-1996 இல் இறைவனடி சேர்ந்தார். அவரது பூதவுடல் அதேதினம் சாவகச்சேரி புனித விகோரியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னார் காலஞ்சென்ற வெலிச்சோர் அகஸ்ரீன் அவர்களது அன்பு மனைவியாரும், ஞானசோதி, எமில் யேம்ஸ், தேவதாசன், பெர்னடேற், ஏ.வீ. ஆனந்தன் ஆகியோரது அன்புத் தாயாரும் ஆவார்.

நாளை சனிக்கிழமை (20-01-1996) மீசாலை புனித மடுமாதா ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் பிரார்த்தனையிலும் வதிவிடத்தில் நடைபெறும் நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

முகவரி:- புதிய புகையிரத நிலைய வீதி,
மீசாலை. (40199)


எமது உயர்வுக்கு வழிகாட்டிய எம் இனிய வாடிக்கையாளர்களே!!!

மீண்டும் எங்கள் சேவை உங்களுக்காக....

## கே. எஸ். ஆர். போட்டோஸ்

(ஒளிப்பட கலையகம்)

உங்கள் நலன் கருதி எங்கள் தொடர்பகங்கள்

★ புதுத்தோட்டம், கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (வட்டவைக்கு அருகில்)
★ க. கணேசமணி, நுணாவில் சந்தி, சாவகச்சேரி.
★ சரசாலை தெற்கு, சரசாலை. (உதயன் பத்திரிகை பணிமனைக்கு அருகில்)
★ அதி உயர் நவீன மிக்சர் துணையுடன் உங்கள் மங்கள வைபவங்களை வீடியோ, புகைப்படங்களாக தருபவர்களும், கலர் பட பிரதியாக்குநர்களும்.

ஒளிப்பட கலையகம்
(கே.எஸ்.ஆர். போட்டோஸ்)
இல. 766, K.K.S. வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

(40194)


## அம்பன் மத்திய மருந்தகம் இருளில் மூழ்கிக் கிடக்கிறது

செம்பியன்பற்று, ஜன, 19

வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் மத்திய மருந்தகம் இருளில் மூழ்கிக்கிடக்கிறது.

இதனால் கர்ப்பிணிப்பெண்கள் இரவு வேளைகளில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வைத்தியசாலையின் கட்டில்கள் அனேகமானவை மெத்தை இன்றி காணப்படுகின்றன. அத்தோடு மெத்தை உள்ள கட்டில்களிலும் கிழிந்த மெத்தைகளே காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலை அருகில் குப்பையும் தேங்கி உள்ளது. இதனால் நுளம்புத் தொல்லை அதிகமாகக் காணப்படுகிறது.

பரந்துபட்டபிரதேசமாகிய வடமராட்சி கிழக்கில் உள்ள ஒரே ஒரு பிரசவ வைத்தியசாலை அம்பன் மத்திய மருந்தகம் தான்.

ஆனால் இதுவும் போதிய அடிப்படை வசதிகள் இன்றி இயங்குவது குறித்து அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (இ-36]


## தமிழ்/ஆங்கில தட்டச்சு வேலைகளை அவசரமாகச் செய்ய வேண்டுமா?

சிரமப் படாதீர்கள்.

குறித்த நேரத்தில், சிறந்த முறையில் அவ்வேலைகளை நாம் செய்து தருவோம்.

★ றோணியோ தட்டச்சு

வேலைகளையும் நாம் பொறுப்பேற்கிறோம்.

**உதயன்**
**கிளை நிலையம்**
**சாவகச்சேரி**

இல 9, மேல்மாடி,
நவீன சந்தை, சாவகச்சேரி.



## தொடர்பு கொள்ளவும்

எமது வீரகேசரி வாடிக்கையாளர்களை தங்கள் ஓடர்களை பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

இல. 8, நவீனசந்தை மேல்மாடி, சாவகச்சேரி.

(சி/2941)


## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
**சின்னத்துரை நித்தியானந்தவேல்**
அவர்கள்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தரும், நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயில் பரிபாலனசபைத் தலைவரும், எங்கள் அன்புத் தந்தையுமான சி. நித்தியானந்தவேல் அவர்களின் முதலாம் ஆண்டுத் திவசம் அவரது இல்லத்தில் நாளை (20-1-96) சனிக்கிழமை நடைபெறும். அவரது ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

செம்பாடு,
பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறை. (4020 1)

## கண்ணீர் அஞ்சலி

மறைந்த மாபெரும் மேதை
**அமரர் எம். எஸ். சிதம்பரப்பிள்ளை**
அவர்கள்

வலிவடக்கு ஓய்வூதியர் நலன்புரிச்சங்கத்தலைவரும், தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்தவரும், சைவப்பெரியாருமாகிய

எம். எஸ். சிதம்பரப்பிள்ளை அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வலிவடக்கு ஓய்வூதியர் சங்கம்.

(40198)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சிங்களவரின் சிங்கக் கொடி!

இனப்பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கென அரசாங்கம் அறிவித்துள்ள தீர்வுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் —

கண்டியில் மிகப்பெரிய அளவில் இன்றைய தினம் சத்தியாக்கிரகம் ஒன்று நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

பௌத்த பிக்குமாரின் ஒன்பது சங்கங்கள் சேர்ந்து இந்தச் சத்தியாகிரகத்தை ஏற்பாடு செய்துள்ளன என்றால்—

தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கக்கூடாது என்பதில் பௌத்த பிக்குகளின் பேரினவாத சிந்தனை எந்தளவுக்குத் தீவிரமாக உள்ளது என்பதனை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

இத்தனைக்கும்,நேற்று நாம் இப்பத்தியில் சுட்டிக் காட்டியது போல—

அரசின் தீர்வுத் திட்டத்தில் தமிழர்களின் மிகப் பிரதானமானதும் நீண்ட காலமாக வெளிப்படுத்தப்பட்டு வருவதுமான அரசியல் அபிலாசையான—வேட்கையான— தன்னாட்சி உரிமை குறித்து ஓர் எழுத்துத் தானும் இல்லை.

சிங்களவர்கள் ஆள்பவர்களாகவும், தமிழர்கள் ஆளப்படுபவர்களாகவும் தொடர்ந்தும் வாழ வேண்டும் என்பதற்காக, அற்ப நிர்வாகச் சலுகைகளைப் பகிர்ந்தளிக்கும் திட்டமே இதுவாகும்.

தமக்கெனத் தனித் தமிழ் அரசு ஒன்று வேண்டும் எனக் கேட்கும் தமிழர்களுக்கு, சில சில்லறைகளை வீசித் திருப்திப்படுத்தும், அவர்களின் வேட்கையை மறக்கச் செய்யும் கயமைத் தனமே இந்தத் தீர்வுத் திட்டம், யானைப் பசிக்கு சோளப் பொரியும் போடாத ஏமாற்று வேலை இது!

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சிங்கள பௌத்த பேரினவாதம் அனுமதிக்க மாட்டாது என்பதனை நன்றாகத் தெரிந்து கொண்டே சந்திரிகா இந்த முயற்சியில் இறங்கியுள்ளார்.

இத்திட்டம் சட்டமாகாமல் தடுப்பதற்காக சிங்களப் பேரினவாதம் பொங்கி எழும் என்பதற்கான சமிக்ஞையே இன்று நடைபெற ஏற்பாடாகி உள்ள பௌத்த பிக்குகளின் சத்தியாக்கிரகம்.

இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம். தமிழர்களும் ஏனைய சிறுபான்மை இன மக்களும் இங்கு அடிமைகளே. அவர்களுக்கு ஆட்சி உரிமை எதுவும் இல்லை — என்பதனை எடுத்துக் கூறும் விதத்திலேயே பௌத்த மத பீடங்களின் தலைமைத் தளமான கண்டியில் தனிச் சிங்கக் கொடி ஏற்றப்பட உள்ளது!

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விட்டதாக அரசாங்கம் வெற்றி கொண்டாடி அங்கு சிங்கக்கொடியை ஏற்றி வைத்தது. தமிழர்கள் அடிமைகளாக்கப்பட்டு விட்டார்கள் என்று காட்டும் விதத்தில் அரசு முன்னோடியாக நடந்து கொண்டது.

அதனைப் பின்பற்றி, அதன் தொடர் நிகழ்வாக, அடுத்த கட்டமாக, இந்த நாடு தனிச்சிங்கள நாடே என்று காட்டும் நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது!

சகல இனங்களும் சமத்துவமாகவும் சம அந்தஸ்துடனும் வாழ்வதற்கு வழி செய்யப்போவதாகக் கூறும் சந்திரிகாவால் —

இன்று நடைபெறும் தனிச் சிங்கக் கொடி ஏற்றும் நிகழ்வைத் தடை செய்ய முடியுமா?

# இடம்பெயர்ந்த அனைவரினதும் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

சாவகச்சேரி, ஜன 19

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ளவர்களின் பங்கீட்டு அட்டைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் மீளாய்வு செய்யப்பட உள்ளன.

பங்கீட்டு அட்டைகள் ஒழுங்காக இல்லாத காரணத்தால் நிவாரணம் வழங்கும் பணிகளில் பிரச்சினைகள் எழுவதாகவும் —

''அ'' ''இ'' அட்டை வைத்திருக்கும் இடம்பெயர்ந்த சகலரும் தமது பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யுமாறும் — அரச அதிபர் கேட்டுள்ளார்.

இடம் பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள பகுதிகளில் நிரந்தர கிராம சேவையாளர்களின் அலுவலகத்தில் தமது பங்கீட்டு அட்டை, குடும்ப அட்டை, அடையாள ஆவணம் ஆகியவற்றைச் சமர்பித்து மீளாய்வு செய்யுமாறும் —

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை இந்த வேலைகள் நடைபெறும் என்றும் —

இந்தக் காலப்பகுதியில் மீளாய்வு செய்யாதவர்கள் அடுத்த கட்ட நிவாரணத்தை பெற முடியாது என்றும் — செயலகம் அறிவித்துள்ளது.

## நிவாரண பொருள்களுடன் லங்கா கல்யாணி வருகிறது

ஒரு தொகுதி நிவாரணப் பொருள்களுடன் 'லங்கா கல்யாணி'' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்துசேரும் என தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்க தேவையான அரிசி, சீனி, மா, பருப்பு போன்றவற்றுடன் நேற்று காகேசன்துறைக்கு இக்கப்பல் வந்து சேர்ந்ததாகவும்—

இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் இக்கப்பலில் இருந்து பொருள் இறக்கும் பணி உடன் ஆரம்பிக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3-173)

## வெளிநாட்டுத் தேவைக்கான சான்றிதழை கொழும்பில் பெறுமாறு அறிவுறுத்து

சாவகச்சேரி, ஜன. 19

கடவுச்சீட்டு உட்பட வெளிநாட்டுத் தேவைக்கான பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்களை கொழும்பில் பெறுமாறு யாழ். செயலக பதிவாளர் பிரிவு அறிவுறுத்தி உள்ளது.

பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள் வழங்கும் பணி யாழ். செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதும்—

இங்கு வழங்கப்படும் சான்றிதழ்கள், கடவுச்சீட்டுப் பெறவும் மற்றும் வெளிநாட்டுத் தேவைகளுக்கு சமர்பிக்கப்படும் போதும் — மீள் பரிசோதனைக்காக கொழும்பு அலுவலகத்துக்கு அனுப்பப்படும் என்று —

ஆகவே வீணான கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு இத்தேவைகளுக்கு சான்றிதழ் தேவைப்படுவோர் கொழும்பு பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் சான்றிதழ்களைப் பெறுவதே உகந்தது என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

## கிழக்கில் தற்போதுள்ள நிலைமை விரைவில் மாற்றப்பட்டு விடுமாம்

### சரத்முனசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜன. 19

கிழக்கு மாகாணத்தில் முன்னரைப் போன்று புலிகள் பாதுகாப்புப் படைகளைத் தாக்கும் திறனைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் இப்போது சிறு, சிறு தாக்குதல்களையே மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலைமையும் விரைவில் மாறி விடும்.

இப்படி இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சுமார் 6 ஆயிரம் பேர் மீளக்குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறியவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது.

புனர்வாழ்வுப் பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## கொச்சின் துறைமுகத்தில் மர்மக் கப்பல்

புதுடில்லி, ஜன. 19

இந்தியாவின் கடல் எல்லைச் சட்டத்தை மீறி கொச்சின் கடற்பகுதிக்குள், நவீனரக சாதனங்கள் பொருத்தப்பட்ட அன்னிய கப்பல் ஒன்று நுழைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

''கல்தே'' என்னும் பெயருடைய இக்கப்பலில் கணனி கரவு வங்கிகளும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியக்கடல் எல்லைக்குள் நுழைவதற்கான அனுமதி பெறாமல் இக்கப்பல் கொச்சினுக்கு வந்ததாகவும் இக்கப்பலில் இருந்த ஆறு பிரெஞ்சு வாசிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## சீருடை மாற்ற இடமின்றி மந்திகை சிற்றூழியர்கள்

மந்திகை, ஜன. 18

மந்திகையில் இயங்கிவரும் யாழ். போதனா வைத்தியசாலை சிற்றூழியர்கள், சீருடை மாற்றுவதற்கு இடமின்றி அவதிப்படுகிறார்களாம்.

இவ்வைத்தியசாலையில் கடமைபுரியுப் பெண் சிற்றூழியர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் முன்பு அங்குள்ள ஒரு வார்ட்டில் ஒரு பகுதியில் ஒதுக்குப்புறமாக திரைகட்டப்பட்டிருந்த ஓர் இடத்தில் உடைமாற்றிவந்தனர்.

தற்போது அந்த திரை கழற்றி எடுக்கப்பட்டு அப்பகுதி வெளியான இடமாகக் காணப்படுவதால் பெண் சிற்றூழியர்கள் உடைமாற்றுவதற்கு இடமின்றி அலைந்து திரிகின்றனர்.

இதுபற்றி நிர்வாகத்திடம் முறையிட்டபோதிலும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என சிற்றூழியர்களால் கவலை தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

## சுண்டிக்குளி மகளிர்கல்லூரி 100 ஆவது ஆண்டு விழா

பருத்தித்துறை ஜன. 19

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் 100 ஆவது ஆண்டு விழாவையொட்டி மெதடிஸ்த திருச்சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட நன்றி செலுத்தும் ஆராதனை பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயத்தில் கடந்த திங்களன்று நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு மறைமாவட்டத் தலைவரும், மெதடிஸ்த திருச்சபையின் யாழ் சேகர முகாமைக் குருவுமான அருள் திரு. எஸ். எஸ். கருணைராஜ் அவர்களின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நன்றி செலுத்தும் ஆராதனையில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் ஆசிரியர்களும் பழைய மாணவிகளும், தற்போதைய மாணவிகளும் மற்றும் நலன்விரும்பிகளும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

தென்னிந்திய திருச்சபை [illegible] யாழ். அத்தியட்சாதீன முன்னைநாள் அத்தியட்சகர் வணக்கத்துக்குரிய டி. ஜே. அம்பலவாணர் இந்த நிகழ்வில் அருளுரை வழங்கினார்.

அவர் தமது அருளுரையில் கடந்த 200 ஆண்டுகளாக கிறிஸ்தவ மிஷனரிமார் பெண்களுக்காகச் செய்த சேவைகளை நினைவு கூர்ந்தார்.

பக்தியும் அறிவும், திறமையான கல்வி, குறைவான பிள்ளைகளை அக்கறையுடன் கவனித்தல் ஆகிய மூன்று இலக்குகளுடன் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி செயற்படுவதாகவும் —

100 ஆண்டுகளாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரியூடாக சமூகம் பெற்ற நிறைவான ஆசீர்வாதங்களுக்கு கடவுளைத் துதித்து, இப்படியான வைபவங்களில் கடந்த கால திறமைகளை பார்த்து மகிழ்ச்சி அடையும் அதே சமயம், வருங்காலச் சுபீட்சகத்துக்கான புதிய அத்தி[illegible] வேண்டும் என்றும் அவர் கூறினார்.

(இ)

## நிதித்துறை அறிவித்தல்

## வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு இன்று 19 ஆம் திகதி மதியம் ஒரு மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு வேண்டுகிறோம்.

★ வைத்திலிங்கம் தவம் — மே/பா சுப்பிரமணியம், சரசாலை றோட், மட்டுவில், சாவகச்சேரி.

★ சாம்பவி செல்வராஜா — இடைக்குறிச்சி, வரணி.

★ கார்த்திகேசு மயில்வாகனம் — மே/பா. ப. கந்தசாமி, கம்பன் வீதி, இடைக்குறிச்சி மேற்கு, வரணி.

★ இளையதம்பி பரராசசிங்கம் — மே/பா. திருநாவுக்கரசு, அல்லாரை வடக்கு, மீசாலை.

★ தம்பிஐயா சண்முகநாதன் (இளைப்பாறிய மரக்காலை முகாமையாளர்) — மட்டுவில் தெற்கு.

★ தயாபரன் சண்முகநாதன் — கடற்கரை வீதி, பருத்தித்துறை. (பழைய முகவரி:- சின்னக்கோவில் தெரு, கோப்பாய்)

★ திருமதி மற்றிக்டா சண்முகலிங்கம்— இலங்கை பென்டிக்கோஸ் மன்றம், புலோலி தெற்கு, புலோலி, பருத்தித்துறை.

★ வேலாந்தை கந்தையா — மே/பா. கந்தசாமி லக்ஷ்மி, தாவளை, இயற்றாளை, கொடிகாமம்.

★ முருகையா ஜெயக்குமார் — சண்முகானந்தா வித்தியாலய ஒழுங்கை, கல்வயல், சாவகச்சேரி.

★ அருளாம்பிகை அருட்சோதிராஜா — நாவற்குழி தெற்கு, கைதடி.

★ கைலாயபிள்ளை கார்த்திகேசு அல்லது கமலேஸ்வரி ஆசிரியை — மீசாலை கிழக்கு, மீசாலை.

★ யோகேஸ்வரி இராஜலிங்கம் — கரம்பக்குறிச்சி, வரணி.

★ குமாரகுலசிங்கம் பிரபாகரன் — மே/பா. சிவபாலசுப்பிரமணியம், தோட்ட ஒழுங்கை, வேம்பிராய், மீசாலை, சாவகச்சேரி.

★ கார்த்திகேசு கோவிந்தபிள்ளை — சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமராவ் காலமானார்

ஆந்திரா மாநிலத்தின் முன்னாள் முதல்வரும், பழம் பெரும் திரைப்பட நடிகருமான திரு என்.டி.ராமராவ் நேற்று அதிகாலை ஹைதராபாத்தில் மாரடைப்பால் காலமானார்.

இவரின் இறுதிச் சடங்குகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஹைதராபாத்தில் நடைபெறும்.

இந்தியப்பிரதமர்திரு பி.வி. நரசிம்ராவ் நேற்று ஹைதராபாத்துக்கு வந்துள்ளார்.

இவர் ராமாரவ்வின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு நேற்றே புதுடில்லி திரும்ப இருந்தார்

ஏழு பிள்ளைகளின் தந்தையான திரு என்.டி.ராமராவ் லக்ஷ்மி பார்வதி என்ற இளம் பெண்ணை இரண்டாம் தாரமாக மணமுடித்தார்.

## தாலிக்கொடிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நகைகளைச் சிப்பாய்கள் வீடு வீடாகத் தேடுதல் நடத்திய போது சூறையாடியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சிப்பாய்களில் சிலர் கழுத்தில் தாலிக்கொடிகள், சங்கிலிகள் சகிதம் நடமாடுவதைத் தாம் கண்டதாக யாழ். நகரில் சிக்குண்ட மக்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தாலிக்கொடி ஆண்கள் அணிவதில்லை· பெண்கள் அதுவும் திருமணமான பெண்களே அணிவார்கள் — என்று தாம் சம்பந்தப்பட்ட சிப்பாய்களில் ஒருவரிடம் கூறிய போது —

இவற்றைக் கழற்றி சூட்கேஸில் வைக்க முடியா . என்னுடன் வேலை செய்பவர் களவாடி விடுவார். நாம் தங்கியுள்ள இடத்தைப் புலிகள் தாக்கினால் இவை பறிபோய் விடும். அதனால்தான் நானே அணிந்திருக்கிறேன் — என்று அந்தச் சிப்பாய் தம்மிடம் சொன்னதாக பொமக்களில் சிலர் மத குருமாரிடம் தெரிவித்தார்கள் என அறியப்படுகிறது.

பொதுமக்கள் விட்டு விட்டு வந்த சைக்கிள்ளை எடுத்து அவற்றிலேயே சிப்பாய்கள் நகரில் சுற்றித் திரிவதாகவும் தெரிவிக்கப்பட்டதாம். (அ-3)

# மரண அறிவித்தல்கள்

பண்டிதர்

## சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி

(ஓய்வு பெற்ற அதிபர்)

வியாபாரிமூலையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர், பண்டிதர் சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி 17-01-96 அன்று காலமானார்.

இவர் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருபாலக்ஷ்மி, கிருபாகரன் (ஸ்ரீ மகாலக்ஷ்மி ஸ்ரோர்ஸ், வாழைச்சேனை), சுதாகரன்(மகாலெட்சுமி ஸ்ரோர்ஸ், வாழைச்சேனை), அனந்தலக்ஷ்மி, சத்தியலக்ஷ்மி (டென்மார்க்), கலாகரன் (B. B.A,பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), பிரபாகரன் B. B.A,ஞானாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நல்லதம்பி (நில அளவைப்பகுதி, கிளிநொச்சி) பானுமதி (B. A), சிவராணி, ஜெகநாதன் (ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ், வாழைச்சேனை), விஜயகாந்தன் (டென்மார்க்), அமிர்த கௌரி (B. A,இராமநாதன் மகளிர் கல்லூரி, கொழும்பு), நித்தியகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, நிருஷ்ணி, அம்புஜன், சுஜனி, கீர்த்திகன், வாகினி, சிந்துஜன், ஸ்ரீராம், நிதர்சன் (டென்மார்க்), சியானா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாபாரி மூலையில் 19-1-96 (வெள்ளி) காலை 10 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி நல்லதம்பி கிருபாலக்ஷ்மி
(மகள்)

'கிருபா அகம்',
வியாபாரிமூலை.

(40204)

## மேரி எலிசபேத் எட்வேட்

(கண்மணி)

இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாக் கொண்டவரும், டச்சுறோட் மீசாலை மேற்கில் தற்போது வசித்தவருமான மேரி எலிசபேத் 18.1 96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி ஆசீர்வாதத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற எட்வேட்டின் B.A (Lon) (இளைப்பாறிய ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) அன்பு மனைவியும், தேவன், சாந்தா (ஜேர்மனி), கமலா, றஞ்சிற் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற ஜோசெப்பின் (ராசாத்தி) மற்றும் திரு. E. R. ஆசீர்வாதம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), A. S. ஆசீர்வாதம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), மேரி மாகிறேட், W. G. ஆசீர்வாதம் (பப்பாக்குணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புளோரன்ரீனா, பவானி, இரட்ணநாயகம் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு பகுதி), மொறின் ஜெயபவானி ஆகியோரின் அன்பு மாமியாரும், கிறிஸ்ரீனா, ஜெயகாந், பியூட்டி, றொய்ஸ், பிரியங்கா, சபேசன், சதுர்சன், கம்ஸலா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19. 01. 96) வெள்ளிக்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு நல்லடக்கத்துக்காக சாவகச்சேரி புனித விகோரியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எ. தேவன்
(மகன்)

(40203)

# கிழக்கு இராணுவ நடவடிக்கை பயன் அளிக்கப் போவதில்லை

## பி. பி. ஸிக்கு தராகி பேட்டி

கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பெரும் எடுப்பில் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை அவர்களுக்குப் பெருமளவு பலனளிக்கப் போவதில்லை.

பிரபல இராணுவ விமர்சகர் ''தராகி'' மேற்கண்டவாறு பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

இந்த இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ளாது புலிகள் பின்வாங்கி ஓடி விட்டால் காடுகளுக்குள் தேடுதலுக்காக சென்றுள்ள படையினர் வெறுமனே காடுகளுக்குள் சுற்றித் திரிந்துவிட்டு திரும்ப வேண்டியதுதான்.

கிழக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இடங்களில் அவர்கள் நிரந்தர முகாம்களை அமைக்காதவிடத்து அங்கு புலிகளைக் கட்டுப்படுத்துவது என்பது வெறும் கண் துடைப்பாகவே முடியலாம்.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள விசேட படையணி போர் முனையில் போரிடும் படையினரே தவிர கைப்பற்றிய இடங்களில் முகாம்களை அமைத்து நிரந்தரமாக நிலைகொள்ளும் படைகள் அல்ல.

இவர்களை நீண்டகாலம் அப்பகுதிகளில் வைத்திருக்கவும் அரசு விரும்பாது.

ஏனெனில் யாழ்ப்பாணத்தில் கைப்பற்றிய பகுதிகளை மேலும் தக்கவைத்துக் கொள்ளக்கூடிய படைப்பலம் இன்று அரசுக்கு இல்லை. இதற்கான படைப்பலத்தை அரசு எங்கிருந்து பெறப்போகிறது என்பது இன்றுள்ள கேள்வியாகும். அதாவது யாழ்ப்பாணத்தைக் கைவிட்டு அந்தத் துருப்புக்களைக் கொண்டு கிழக்கில் முகாம்களை அமைக்க அரசு உத்தேசிக்குமா? என்பதும் இன்றுள்ள கேள்வியாகும்.

கடந்த காலங்களில் இது போன்ற பல பாரிய இராணுவ நடவடிக்கைகளை வடமுனை, காண்டாமுனை, கஞ்சிகுடிச்சாறு, பேராறு போன்ற காட்டுப் பகுதிகளில் இராணுவம் மேற்கொண்டிருந்தது,

இந்த நடவடிக்கைகளில் இறுதியில் புலிகள் மீண்டும் அந்தக் காட்டுப் பகுதிகளில் ஊடுருவியதையே கடந்த ஐந்து வருடங்களாகக் காண முடிகிறது.

இவ்வாறு தராகி பேலும் கூறினர். [இ-7]

## கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தன.

கிழக்கில் பெய்துவரும் மழையால் தடைப்பட்டிருந்த இந்த நடவடிக்கையில் புதிய யுச்தியாக வெளியான பகுதி ஊடாக பனடயினர் மெதுவாக நகர்வதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## சகல...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களும், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளை இயக்க வசதியாக பாடசாலைகளில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தவர்களை வேறு இடங்களில் குடியமர்த்துவது பற்றி ஆராயப்பட்டது.

63 பாடசாலைகளில் தங்கியுள்ள 3 ஆயிரத்து 426 குடும்பங்களைச் சேர்ந்த இடம் பெயர்ந்தவர்களை தற்போது துரிதமாக அமைக்கப்பட்டு வரும் தற்காலிக வீடுகளில் குடியமர்த்துவதெனவும் —

அடுத்தமாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர் பாடசாலைகளை முழுமையாக செயற்படுத்துவதெனவும் — முடிவு செய்யப்பட்டது.

பாடசாலைகளை முழுமையாக ஆரம்ப வகுப்பு முதல் உயர் வகுப்பு வரை நடத்த தேவையான இட வசதிகள் தளபாடங்கள், ஆய்வு கூட உபகரண வசதிகள் ஆகியன பற்றி ஒரு வாரத்தில் அறிக்கை சமர்பிக்குமாறு கல்விப் பணிப்பாளரிடம் கேட்கப்பட்டது.

இந்த தேவைகளை வெளிநாட்டு, உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களிடம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார். (இ 3-7)

## வடக்குக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீரர்களும் ஈடுபட்டுள்ளனர் என்றும் —

''இன்டிபென்டன்ட்'' பிரிகேட் ஒன்று அழைக்கப்படும் இப்படைப் பிரிவினர் யாழ்ப்பாணச் சமரின் போது முன்னணியில் நின்றவர்கள் என்றும் ஜோர்ஜ் ஆர்னி பேசம் தெரிவித்துள்ளார்.

வடக்கில் மேற்கொள்ளப்பட்ட ''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ளத்தான் இராணுவத்தினர் முன்னர் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் அண்மைக்காலங்களில் கிழக்கில் புலிகள் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதை அடுத்து இராணுவத்தினர் தமது திட்டத்தை மாற்றி உள்ளதாகத் தெரிகிறது.

கிழக்கின் சிவில் நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் ஏறக்குறைய முடக்கிவிட்டார்கள்.

பல வாரம் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படும் தற்போதைய கிழக்கு இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் விநியோகப் பாதையைத் தடுப்பதையும், அவர்களின் சில காட்டுப் பகுதித் தளங்களை அழிப்பதையுமே நோக்கமாக் கொண்டுள்ளது.

இப்படி ஜோர்ஜ் ஆர்னி மேலும் கூறினார். (இ-7)

## படையினரிடம் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அங்கு சென்றிருந்தன.

மதகுருமார்கள் யாழ். நகரப் பகுதியில் உள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்தனர்.

யாழ்ப்பாணத்தில் சிக்குண்ட மக்கள் குறிப்பிட்ட மூன்று நான்கு இடங்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே இருக்கவேண்டும். வேறு இடங்களுக்குச் செல்லவோ வெளியே நடமாடவோ அனுமதிக்கப்படுவதில்லை.

அதனால் தாம் சிறைக்கூட வாழ்க்கையே நடத்தவேண்டி இருப்பதாக அவர்கள் மத குருமார்களிடம் தெரிவித்தார்களாம்.

வடமராட்சியில்

உதய சேவை

வடமராட்சி வாழ் மக்களே!

காலை எழுந்தவுடன் உங்கள் நண்பன் ஒருவன் ஓடி வருகின்றான்.....
ஆம்; உண்மை தான்....!

உங்கள் அபிமான நாளிதழ் உதயனை உதய வேளைப் பொழுதில் உங்களது வீட்டிலேயே பெற்றுக் கொள்ள

உதய சேவை
ஆரம்பமாகிவிட்டது

விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

உதயன் கிளை நிலையம்
பழைய பஸ் நிலைய சதுக்கம், பருத்தித்துறை.

உங்கள் அபிமான நாளிதழ்

உதயனின்

கிளிநொச்சி கிளை நிலையம்

கண்டி வீதியிலுள்ள
கிளிநொச்சி வை.எம்.சி.ஏ கட்டடத்தில் இயங்குகிறது.

வன்னியில் விளம்பர, விநியோக, செய்தி விடயங்களுக்கு
கிளிநொச்சி கிளை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 19-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org